**ஹம்பாந்தோட்டை மாநகர சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜூன் 11 திகதியும் நகர முதல்வர் உட்பட அங்கத்தவர்களுக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 340,805 தொகைக்கான ஊழியர் பிணை மற்றும் ஊழியர் பிணை முதலீடு, நிதிக் கூற்றுக்களில் இருந்து விடுபட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | இதன் மூலம் சபைக்கு நேரடி நலன் ஒன்று இன்மையால் குறிப்பு ஒன்று மூலம் வெளிப்படுத்தப்பட்டது. |
| (ii) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களுக்காக வட்டி வருமானம் ரூபா 234,777 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 நிதிக்கூற்றுக்களை இணக்கஞ் செய்யும் போது தவறினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் கூட்டுத்தொகை ரூபா 1,016,035 தொகைக்கான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்தல் செய்வதற்கு முடியாதிருந்தது. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சமர்ப்பிக்கப்படக் கூடிய தகவல்கள் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படுவதுடன் அரசாங்க மூலதன உதவி மற்றும் அபிவிருத்தி ஒதுக்கங்கள் தொடர்பாக விரிவான தகவல்கள் சமர்ப்பிப்பதற்கு தகவல்கள் ஏதும் சபையில் காணப்படவில்லை. |

**1.4 இணக்கமின்மை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 371(5) | ரூபா 74,270 தொகை பெறுமதியான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறிப்பிட்ட நிர்மாண வேலைகளின் பிடிப் பணம் கிடைத்ததும் முற்பணத்தை தீர்க்கப்பட இருப்பதுடன் மீன் சந்தையின் நீர் சிட்டைகள் மற்றும் மாதாந்த கட்டணம் அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 2 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 242,217 தொகை பெறுமதியான வைப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஜனவரி 30 திகதி பெற்றிருந்த நிதிக் குழு தீர்மானத்தின் பிரகாரம் 2019 பெப்ரவரி 21 திகதிய 54 ஆம் இலக்க பண உறுதிப் பத்திரத்தின் மூலம் டென்டர் வைப்புக்கள் ரூபா 145,500 தொகை மற்றும் பலவின வைப்புக்கள் ரூபா 177,695 தொகை என்பன சபையின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டது. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | சபையின் 06 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எரிபொருள் பரிசோதனை விரைவாக மேற்கொள்வேன். |
| (இ) | 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/ பபாகொ/2010/1 இலக்கங் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | 62 கடைகளின் வாடகை உடன்படிக்கைகள் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறிப்பிட்ட உடன்படிக்கைகளை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், திஸ்ஸ வீதியில் கடை வாடகையாளர்கள் புதிய பெறுமதி மதிப்பீட்டு வரி செலுத்துவதை புறக்கணித்துள்மையால் அவற்றை மீண்டும் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். ருஹுுணு பிலாஸா கடைகளின் பெறுமதி மதிப்பீட்டுக்கான விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இது வரை கிடைத்திருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2010 ஆகஸ்ட் 17 திகதிய பீஈ/01/01 இலக்கம் கொண்ட மின்சக்தி மற்றும் வலு அமைச்சின் சுற்றறிக்கை | வீதி விளக்குகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,768,148 இற்கான செலவுகளில் 89 சதவீதம் மீளளிப்பு செய்திருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வீதிவிளக்குகள் பராமரிப்பு விடயங்களுக்காக மீளளிப்பு செய்யக் கூடிய தொகையை திருத்தம் செய்து செலுத்தும் படி மின் பொறியியலாளருக்கு 2018 ஏப்ரல் 20 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 1,198,539 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,179,128 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,627,613 | 6,086,497 | 4,377,135 | 1,919,022 | 6,877,000 | 7,166,642 | 6,028,788 | 2,050,078 |
| வாடகை | 14,909,185 | 15,237,900 | 4,753,682 | 459,282 | 15,421,000 | 18,598,220 | 18,347,680 | 545,273 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,053,000 | 4,214,873 | 4,061,123 | 149,500 | 2,492,000 | 4,117,732 | 4,005,995 | 584,950 |
| ஏனைய வருமானங்கள் | 10,798,000 | 9,580,086 | 17,123,628 | 4,298,160 | 7,552,000 | 7,187,906 | 4,885,463 | 3,491,917 |
| மொத்தம் | 36,387,798 | 35,119,356 | 30,315,568 | 6,825,964 | 32,342,000 | 37,070,500 | 33,267,926 | 6,672,218 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த வருமான நிலுவை ரூபா 6,672,218 தொகையாக இருந்ததுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 35,119,356 தொகையாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 41,791,574 தொகை எனினும் சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 30,315,568 தொகையாகக் காணப்பட்டமையால், வருமானம் சேகரிக்கும் முன்னேற்றம் 73 சதவீதம் ஆக காணப்பட்டடது. வருட இறுதியில் உள்ளவாறு மேலும் அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவை வருமானம் ரூபா 6,825,964 தொகையாக இருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 2018 ஆண்டிற்கான மொத்த அறவீடுகள் நிலுவைகளுடன் ரூபா 34,657,021 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னேற்றம் 82 சதவீதமாகும். |

### 2.2.3 வீதிவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 2,050,078 தொகையாகக் காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 6,086,497 தொகை ஆகும். அதன் பிரகாரம் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய வீதவரி மற்றும் வரி வருமானம் ரூபா 8,136,575 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 4,377,135 தொகையாகக் காணப்படமையால் வீதவரி மற்றும் வரி வருமானம் சேகரித்தலின் முன்னேற்றம் 54 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | வீதவரி சேகரிப்பின் முன்னேற்றத்தை அதிகரிக்க வேண்டும். | 2018 ஆண்டிற்கான வீதவரி மற்றும் வரி சேகரித்தல் 76 சதவீதமாகும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 1,919,022 தொகையாக காணப்பட்டதுடன், மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 252(1) இன் பிரகாரம் அந்த நிலுவைகளை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் நிலுவை மீதியில் 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட மீதி ரூபா 995,127 தொகையும் 05 வருடங்களை விட கூடிய மீதி ரூபா 119,358 தொகையாக இருந்தது. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையில் 2019 மே 24 திகதியில் உள்ளவாறு ரூபா 313,027 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 191,206 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக வெளிக்களத்தில் சென்று நிலுவைகளை அறவீடு செய்வதற்கான சிவப்பு அறிவித்தல் வினியோகித்தல் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துகின்றேன். |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வாடகை வருமானம் ரூபா 15,237,900 தொகையாக இருந்ததுடன், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 4,753,682 தொகை காணப்பட்டது. இதன் பிரகாரம் சிட்டையிடப்பட்ட வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 10,484,218 தொகை குறைவடைந்து காணப்பட்டதுடன் குறைவடைதல் 69 சதவீதமாகும். | வாடகை அறவீடு செய்யும் முன்னேற்றத்தை கணிப்பிட வேண்டும். | வாடகையுடன் தொடர்புடைய குத்தகை மற்றும் டென்டர் வாடகை தவறுதலாக ஏனைய வருமானங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளமையால் அதனை சரிசெய்த பின்னர் முன்னேற்றம் 98 சதவீதமாகும். |
| (ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கடை வாடகை ரூபா 260,070 இற்கான மீதியில் 03 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரை இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 174,815 தொகை ஆகும். | நிலுவைத் தொகையை அறவிடப்பட வேண்டும். | ரூபா 78,850 தொகை அறவிடப்பட்டதுடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திர கட்டணம் வருமானம் ரூபா 5,053,000 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 4,214,873 தொகையாகும். இதன் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதியில் 83 சதவீதம் மாத்திரம் சிட்டையிடப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | நடைமுறை ஆண்டின் சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 96 சதவீதம் சேகரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 149,500 இற்கான மீதியில் 02 வருடங்கள் முதல் 03 வருடங்கள் இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 51,500 தொகை காணப்பட்டது. | நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் போது நிலுவைத் தொகையில் ரூபா 10,000 அறவிடப்பட்டிருந்ததுடன் மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

### 2.2.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 182,977 தொகை மற்றும் ரூபா 3,362,135 தொகைகள் காணப்பட்டது. பெறவேண்டிய முத்திரைக் கட்டண மீதியில் 02 வருடங்களுக்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட நிலுவை மீதி ரூபா 1,132,635 தொகைக் காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களில் ரூபா 2,429,032 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் மீதித்தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் அடங்கியுள்ள ரூபா 7,634,269 தொகை பெறுமதியான 05 நிர்மாண வேலைகளை மீளாய்வாண்டின் போது செயற்படுத்தி இருக்கவில்லை. | பாதீட்டில் அடங்கியுள்ள அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | குறிப்பிட்ட நிர்மாண வேலைகள் நிறைவேற்றுவதற்காக நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சி அமைச்சிற்கு மற்றும் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு மதிப்பீடுகள் சமர்ப்பித்த போதிலும் அவற்றிற்கான நிதியம் கிடைக்காமையும் இந்த திட்டத்திற்காக பாரிய தொகையொன்று செலவாகும் என்பதினால் சபை நிதியத்தில் இருந்து மேற்கொள்ளவில்லை. |

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரழின் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவை செய்ய வேண்டும். | உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் 2019 ஆண்டு முதல் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நடைபெற்ற உள்ளூராட்சி நிறுவனங்களில் தேர்தலினை நடாத்துதல் தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் உண்மைச் செலவை மிகைத்து மீளளிப்புச் செய்திருந்த தொகை ரூபா 54,881 தொகை ஆகும். | உண்மைச் செலவு மீளளிப்புச் செய்யப்பட வேண்டும். | தேர்தல் கடமைகளின் போது சுகாதார மற்றும் உடல் ஆரோக்கிய சேவைகள் வழங்குதல் மற்றும் நீர், எரிபொருள் செலவுகளுக்கான பணம் உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து உரிய முறையில் மீளளிப்புச் செய்யப்பட்டதுடன் அந்த பணத்தில் செலவுகள் தீர்க்கப்பட்ட பின்னர் மீதியாகவுள்ள பணம் பலவின வைப்பு ஒன்றென முன்கொண்டு செல்லப்பட்டது. |
| (ஆ) | 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய தபபா/பபாகொ/01/2010 இலக்கம் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 52 கடைகள் தொடர்பாக புதிய பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட உடன்படிக்கைகளை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் திஸ்ஸ வீதியில் கடை வாடகை யாளர்கள் புதியபெறுமதி மதிப்பீட்டு பெறுமதியின் பிரகாரம் வாடகை செலுத்துவதற்கு மறுத்ததினால் அவற்றை திருப்பி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். றுஹுணு பிலாஸா கடைகளின் பெறுமதி மதிப்பீட்டுக்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இது வரை கிடைத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை மாநகர சபைக்கு சொந்தமான 38 காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி, பெறுமதி மதிப்பீடு செய்திருக்க வில்லை. | பெறுமதியை, பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணிகள், மற்றும் கட்டிடங்களின் கணிப்பீடு மேற்கொண்ட பின்னர் அந்த காணிகளின் உரிமை மற்றும் எல்லைகளின் சிக்கல் தன்மை அற்றனவா என இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், அதன் பின்னர் அந்த ஆதனங்களுக்காக பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி உட்படுத்துவதற்கு எதிர்பாரக்கின்றேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 35 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மிகை பதவியணி 01 இனை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகைப் பதவிகள் முறைப் படுத்துவது மற்றும் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். | 21 வெற்றிடங்களை நிரப்புதல் தென் மாகாண பிரதான செயலகத்தினால் மேற்கொள்ளப் படுவதுடன் 2019 ஏப்ரல் 01 திகதி முதல் செயற்படும் வகையில் 14 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மாநகர சபையின் 05 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக் கப்பட்ட கடமைகள் அல்லாத வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் | அங்கீரிக்கப்பட்ட கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். | தென் மாகாண ஆளுனரினால் 2013 ஏப்ரல் 16 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த புதிய சேவை யாப்பின் பிரகாரம் அலுவலகம், நூலகம், களஞ்சியம், நீர் மற்றும் பூட்டும் தொழிலாளர்கள் ஆகிய பதவிப் பெயர்கள் வேலை/ வெளிக்கள தொழிலாளர் பதவிக்கு உள்வாங்கப்பட்டுள்ளமையால் அலுவலக மற்றும் களஞ்சிய தொழிலாளர் பதவிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். |
| (இ) | மீளாய்வாண்டின் போது சேவையை விட்டுச் சென்றுள்ள மூன்று ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 87,750 தொகைக்கான கடன்/ முற்பணம் மீளாய்வாண்டின் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கொள்வனவு செய்திருந்த 10 முகாமைத்துவத் தகவல் முறைமைகளில் கணக்குகள் மற்றும் கொடுப்பனவு முறைமை மற்றும் 02 நிகழ்வு நிலை மற்றும் கொடுப்பனவு முகாமைத்துவ முறைமைகள் என்பன ஆரம்ப கட்ட மட்டத்தில் காணப்பட்ட அம் முறைமைகளை நவீன மயப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 326,500 இற்கான செலவு சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் ஒன்றாக ஆகியுள்ளது. இந்த முறைமையை கொள்வனவு செய்து 02 வருடங்கள் கடந்துள்ள போதிலும் ஸர்வர் ஒன்று கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த முறைமைகள் உச்ச செயற்பாட்டு மட்டத்தில் பேணப்பட வேண்டும். | தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தல் தொடர்ந்து நிறுவன உத்தியோகத்தர்களின் வேண்டுகோளின் மீது மேற்கொள்ள ப்படுவதுடன் நிகழ்வு நிலை கொடுப்பனவுகளுக்கான தகவல் முறைமை தயாரித்து முடிவடைந்து ள்ளதால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. கணக்குகள் மற்றும் கொடுப்பனவு முறைமையும் தயாரிக்கப்பட்டு முறைமையுடன் சேர்க்கப்பட்டுள்ளதுடன், உரிய விடயம் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் வேலைப் பழு காரணமாக தரவுகள் உட்படுத்துவதற்கு தாமதமொன்று ஏற்பட்டுள்ளமையால் அவற்றை விரைவாக உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். ஸர்வர் தொடர்பாக எதிர்காலத்தில் உரிய சேவைகளை ICT நிறுவனத்தில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை மாநகர சபையினால் அனுபவிக்கப்பட்டு வரும் 42 காணிகள் மற்றும் 06 வாகனங்கள் என்பவற்றின் பதிவு செய்யப்பட்ட உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இந்த வாகனங்களின் உரிமையை பிரதான செயலகத்தில் இருந்து உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.5.2 வருடாந்த பண்ட/ இருப்பு கணிப்பீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்ட 21 பண்டங்கள் தொடர்பாக விதப்புரைகள் 2019 மே 22 திகதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை. | பண்டக் கணிப்பீடு விதப்புரைகளை செயற்படுத்த வேண்டும். | 2019 ஜுன் 11 திகதிய கடிதத்தின் பிரகாரம் 21 பண்டங்களில் 18 பண்டங்கள் 2018 ஆண்டின் போது திருத்தப்பட்டதுடன், 2 பண்ட வகைகள் தொடர்பாக திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் ஒரு பண்டத்தின் திருத்த வேலைக்கு தேவையான உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்கு முடியாமையினால் திருத்த வேலை மேற்கொள்ளப்படவில்லை. |

**3.6 பெறுகை**

**3.6.1 ஒப்பந்த நிருவாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காலநீடிப்பு வழங்கப்பட்டிருக்காத பஸ் நிலையத்திற்கு முன்பாக GI குழாய் பொருத்தும் நிர்மாண வேலையின் உடன்படிக்கையின் பிரகாரம் 2018 ஆகஸ்ட் 18 திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும், தொழில் நுட்ப உத்தியோகத்தரின் வேலை பூர்த்தி செய்தல் அறிக்கையின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட்ட திகதி 2018 திசெம்பர் 28 திகதியாக காணப்பட்டமையால் தாமத காலமாகிய 132 நாட்களுக்காக ரூபா 39,450 இற்கான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கை காலத்தில் நிர்மாண வேலைகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | தாமதக் கட்டணம் சங்கத்தில் விலைப்பட்டி செலுத்தும் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் குறிப்பிட்ட கழித்தல்கள் தொடர்பான தகவல்கள் விரைவாக கணக்காய்விற்கு அனுப்புவேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தென் மாகாண கிராமிய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை நகர சபை விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலை தொடர்பாக அங்கீகரிக் கப்பட்டிருந்த கொடுப்னவு ரூபா 80,330 தொகை மிகையாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது என பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | வேலை பூர்த்தி செய்த அறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | மிகையாக அங்கீகரித்துள்ள தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 செலவு விடயங்களில் ரூபா 16,903,875 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அவை 11 சதவீதம் முதல் 18 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | முறையான ஆய்வு ஒன்று மதிப்பாய்வு ஒன்றுடன் முடிந்த அளவு உள்ளவாறான பெறுமதிகளுக்கு இணங்கக் கூடிய விதமாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 05 செலவு விடயங்களில் பாதீட்டுத் தொகையை மிகைத்து ரூபா 5,821,718 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவை 20 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | முறையான ஆய்வு ஒன்று மதிப்பாய்வு ஒன்றுடன் முடிந்த அளவு உள்ளவாறான பெறுமதிகளுக்கு இணங்கக் கூடிய விதமாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |